வாக்குமூலம்
உரிமையியல்மற்றும்குற்றவியல்நடுவர்நீதிமன்றம், மாதவரம்
வழக்குஎண் CC 36/2020
வழக்குசாட்சி LW3/PW3

| பெயர் | மகேஷ் | ஜாதி | |
|---|---|---|---|
| கணவர்/தந்தை | ராமசாமி | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | 51 |

தேதி 16.02.2026
எதிரி ஆஜர் இல்லை.
சாட்சி சத்தியபிரமாணம் செய்யப்பட்டார்.
**முதல் விசாரணை**

நான் கொளத்தூரில் வசித்து வருகிறேன். அ.சா. 1 எனது அக்கா பையன். கடந்த 08.03.2019 அன்று எனது அக்கா வீட்டில் திருடு போய்விட்டதாக கும்பகோணத்தில் இருந்து திரும்பி வந்த்தும் என்னிடம் கூறினார்கள். நான் சென்று பார்த்த போது பீரோ, கதவு உடைக்கப்பட்டு பொருட்கள் கலைந்து கிடந்தது. டீவி காணாமல் போயிருந்தது. அ.சா.1 புகார் அளித்தார். போலீசார் என்னை விசாரணைச் செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

சம்பவம் பற்றி நேரடியாக தெரியுமா என்றால் தெரியாது. திருடியவர்கள் யார் என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. புகார்தார்ர் எனது அக்கா மகன் என்றால் ஆமாம். எதிரிகளை கைது செய்த போது என்னிடம் அடையாளம் காட்டினார்களா என்றால் இல்லை. புகார்தாரர் எனது அக்கா மகன் என்பதால் போலீசார் கேட்டுக்கொண்டதால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**